# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

மனு எண் : 0317/ஊராட்சி/2017

ஆணை எண் : 031/2017

நாள் : 22.03.2017

திரு. ஜெ. பிரபு,
த/பெ. டி. ஜெயபாலன்,
வெள்ளாளர் தெரு, தம்பிராஜபுரம்,
மாடாகுடி.
– மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கும்பகோணம்.
– எதிர் மனுதாரர்

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், தில்லையம்பூர் ஊராட்சி, தம்பிராஜபுரத்தில் வசிக்கும் திரு. ஜெ.பிரபு என்பவர், அவருடைய 08.03.2017 நாளிட்ட மனுவில், தில்லையம்பூர் ஊராட்சியில் குடிதண்ணீர் ரசீது வழங்கியதில் சந்தேகம் ஏற்பட்டதால் 30.01.2017 அன்று மாவட்ட ஆட்சியர் மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டதாகவும் அதனை ஆய்வு செய்து 15 நாட்களில் பதில் தருவதாக கூறினார்கள் என்றும், ஆனால் மனு கொடுத்து 30 நாட்கள் ஆகியும் பதில் வராததால் மீண்டும் புகார் மனு 27.02.2017 அன்று கொடுக்கப்பட்டதாகவும், ஆனால் இன்றுவரை பதில் ஏதும் பெறப்படவில்லை என்றும் தெரிவித்து, இந்த மனுவினை விசாரணை செய்து தில்லையம்பூர் கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) - ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் " ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் திரு. ஜெ. பிரபு அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை-600 032

-//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6/4/2017

செயலாளர்.

6.4.17 6/4/17

பெறுநர்

திரு. ஜெ. பிரபு,
த/பெ. டி. ஜெயபாலன்,
வெள்ளாளர் தெரு, மாடாகுடி,
தம்பிராஜபுரம்(Post) 612 402.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர் மாவட்டம்,
தஞ்சாவூர். (இணைப்புடன்)

உதிரி – 5